# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 1 ஹிஜ்ரி 1427 ரஜப் ஆகஸ்ட் 2006

இலவசம்



# உன்னத சமுதாய இலக்கை அடைய "ரிஸாலா" பத்து அம்சத் திட்டம்

# நாடி

## உங்களை நாடி வருகிறது




அன்று. . .




இன்று. . .

முயிஸ் காலாண்டு இதழாக இதுவரை உங்கள் கரங்களில் தவழ்ந்து தகவல்களை வழங்கிவந்த செய்திச்சுடர் “நாடி” எனும் பெயர் மாற்றம் பெற்று உங்களைத் தேடி வந்திருக்கிறது. இறைவனின் நல்லருளால் இனி நம் சமுதாயத்தின் நாடித் துடிப்பாக “நாடி”யின் நற்பணி தொடரும்.

மலாய், ஆங்கில மொழி இதழாக இயங்கி வந்த “வரித்தா கித்தா”வும் நாடி எனும் பெயர் மாற்றம் பெற்றுள்ளதை அறிவீர்கள். வெறும் செய்தி மடலாக வெளிவருவதைவிட ஒட்டு மொத்த சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் பலதுறை வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பாலமாக, நாடித் துடிப்பாக இவ்விரு இதழ்களும் திகழ வேண்டும் என்று முயிஸ் விரும்பியது. அதன் விளைவே இப்பெயர் மாற்றம்.

வரித்தா-செய்திச் சுடர் ஆசிரியர் குழு இப்பெயர் மாற்றத்தை ஆழ்ந்து பரிசீலித்தது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் புதிய நூற்றாண்டுக்கு ஈடு கொடுக்கும் வகையில் முனைப்பாற்றலுடன் கடமையாற்ற வேண்டும். சமூகப் பிணைப்பும் ஒருங்கிணைப்பும் அதற்கு மிக்க அவசியம். சமுதாயத்தின் நாடித் துடிப்பாக முயிஸ் இதழை மாற்றுவது ஆக்ககரமான பணி என ஆசிரியர் குழு முடிவு செய்தது.

தகவல், கருத்து, சிந்தனை பரிமாற்றக் களமாகவும், தளமாகவும் நாடி விளங்க வேண்டும். அது காலத்தின் தேவை. நாடி என்ற சொல்லுக்கு பொருள் விளக்கம் சொல்லவா வேண்டும்? நம் இரத்த ஓட்டத்தின் தடம் அது. தமிழ், மலாய், அரபு மொழிகளுக்கும் பொதுவான சொல் இது. நாடித் துடிப்பே நமது வாழ்க்கைத் தடம்.

உன்னத வாழ்க்கை முறையே நமது சமுதாய இலக்கு. அந்த இலக்கை, குறிக்கோளை நமது மொத்த சமுதாயமும் அடைய வேண்டும், அனுகூலங்களைப் பெற வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை வகுத்து முயிஸ் செயல்படுத்தி வருகிறது. அதற்குத் துணை நிற்பதே நாடி இதழின் பணி.

நமது மார்க்கக் கடமைகள்-தக்வா நெறிகளைப் பேணிப் போற்றுவதும் நாடியின் நற்பணியாக விளங்கும்.

சமுதாயத்தின் நாடித் துடிப்பான நாடி இதழுடன் நல்லுணர்வையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர் குழு

# உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் பத்து அம்சத் திட்டம்

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் ஆக்ககரமான, முற்போக்கான பத்து அம்சத் திட்டத்தை பரிந்துரைத்திருக்கிறது. சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமய, சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்தி, அவர்களின் அடையாளத்தை நிலைபெறச் செய்வது அதன் அடிப்படை நோக்கம்.

உன்னத சமுதாய இலக்கை அடைய சிங்கப்பூர் முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய பத்து அம்சங்கள் வருமாறு:

1 இஸ்லாமியக் கோட்பாடுகளை வலுவாகப் பின்பற்றும் வேளையில் சிங்கப்பூர் முஸ்லிம்கள் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் திறனையும் பெற வேண்டும்.

2 ஆன்மீக, அறநெறிக் கோட்பாடுகளை வலுப்படுத்திக் கொண்டு புதிய சவால்களைச் சமாளிக்கும் திறனைப் பெற வேண்டும்.

3 நவீன சூழ்நிலைகள், காலமாற்றப் போக்குகள், பழக்க வழக்கங்களுக்கு இடையிலும் இஸ்லாயிய நெறிமுறைகளை மிக உறுதியாகப் பேண வேண்டும்.

4 தற்காலப் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்வதுடன் இஸ்லாமிய நாகரிகத்தையும் சரித்திரத்தையும் மதித்துப் போற்ற வேண்டும்.

5 மற்ற நாகரிகங்களை மதிப்பதுடன் மற்ற சமூகங்களின் நற்பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும்.

6 நல்ல முஸ்லிம்கள் நாட்டின் நல்ல குடிமக்களாகவும் திகழ வேண்டும்.

7 பல இன-சமய சமுதாயம், சமயச் சார்பற்ற நாடு எனும் கண்ணோட்டத்திற்கு ஏற்ப பொறுப்புணர்வுடன் முஸ்லிம்கள் பங்காற்ற வேண்டும்.

8 அனைவரின் நன்மதிப்புக்கும் உரியவர்களாக நாம் திகழ்ந்து அனைத்துலகக் கொள்கைகளை மேம்படுத்த வேண்டும்.

9 இஸ்லாத்திற்கு முரண் இல்லாத வகையில் மற்றவர் நற்பண்புகளை மதித்து பன்முனைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

10 மற்ற சமூகத்தினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும்.

“உங்களில் ஒவ்வொரு வ(குப்பாருக்)கும் ஒவ்வொரு மார்க்கத்தையும் நாம் தாம் ஏற்படுத்தினோம்.... ஆகவே, நன்மையின் பக்கம் விரைந்து செல்லுங்கள்...” என்று திருக்குர்ஆன் மொழிகிறது. *(அல் மாயிதா- வசனம் 48)*

சிங்கப்பூர் முஸ்லிம்கள் இஸ்லாமிய நெறிமுறைகளை நன்கு உணர்ந்து செயல்படும் அதே வேளையில், நாட்டு நலனுக்கும் பாடுபட வேண்டும். அதற்கான பரந்த கண்ணோட்டத்தை உருவாக்குவது பத்து அம்சத்தின் இலக்கு.

முயிஸ் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் சிறப்பு அம்சங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது. ‘ரிஸாலா’ எனும் அந்த எண்பது பக்க நூலை முஸ்லிம் லிவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் வெளியிட்டார். இந்நூலை தமிழிலும் வெளியிட முயிஸ் திட்டம் இட்டுள்ளது.

# இந்தோனேசியா பெர்த்தாம் தீவில் மஸ்ஜித் ஜாமியா இளைஞர் அணியின் நற்பணி



சவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமியா பள்ளிவாசல் தொண்டூழியர்கள் தங்கள் சமூகச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக கடந்த ஏப்ரல் மாதம் இந்தோனேசியாவின் சில தீவுகளுக்குச் சென்று வந்தனர்.

## புலோவ் பெர்த்தாம்

பாத்தாம் தீவிலிருந்து சுமார் 20 நிமிடப் படகுப் பயண தூரத்திலுள்ள புலோவ் பெர்த்தாம் இயற்கை எழில் மிக்க தீவு. 37 குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வருகின்றன. அவற்றில் முஸ்லிம் குடும்பங்கள் 31. கடற்கரைக்கு மிக அருகில் கடல் மட்டத்திலிருந்து 6 அடி உயரத்தில் அமைந்ததுள்ள மரப் பலகை வீடுகளில் அவர்கள் வசித்து வருகின்றனர். உணவு, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் பல குடும்பங்கள் உள்ளன. போதிய ஊதியம் இல்லாமல் மிக எளிய முறையில் பலர் வாழ்ந்து வருகின்றனர். வீடுகளுக்கு மரப்பாலங்கள் மூலமே செல்ல வேண்டும். பலமில்லாமல் உடைந்து விழக்கூடிய நிலையில் பல பாலங்கள் உள்ளன. சில வீடுகளில் மட்டுமே மின்சார விளக்குகளைப் பார்க்கலாம். ஜெனரேட்டர் மூலம் கிடைக்கும் மின்சாரம் அது. பெரும்பாலான வீடுகள் அந்த வசதியைப் பெறவில்லை.

## வாழ்க்கைச் சூழ்நிலை

பெர்த்தாம் தீவில் தொலைத் தொடர்பு வசதிகள் இல்லை. அருகிலுள்ள தீவுகளுக்கு சிறு படகுகளில் தான் மக்கள் செல்ல வேண்டும். பாத்தாம் தீவிலிருந்து இங்கு வரும் படகுகள் மட்டுமே இயந்திரப் படகுகள். இந்தத் தீவுவாசிகளில் பலர் பாத்தாம் தீவைப் பார்த்ததில்லை. படகுப் பயணத்திற்கு 10 முதல் 15 வெள்ளி பணம் செலுத்த முடியாத வறுமை தான் காரணம்.





மாணவர்களுக்கு மார்க்கக் கல்வியும் போதிக்கப்படுகிறது.

எனினும், பெர்த்தாம் தீவு முஸ்லிம்கள் இஸ்லாத்தை சரிவரத் தெரிந்து வைத்திராதது கவலைக்குரியது. மார்க்க வழிமுறைகளை அவர்கள் கற்றறிய போதுமான வாய்ப்புகள் இல்லாததுதான் அதற்குக் காரணம். கிறிஸ்துவ பிரசார அமைப்புகள் அவ்வப்போது இத்தீவுக்கு வந்து அவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

வகைவகையான உணவுக்கு வழியில்லாததால் மீனை நம்பியே இவர்கள் வாழ்கின்றனர். மழைநீர் தான் குடிநீர் ஆதாரம். அருகிலுள்ள மலைப் பகுதியில் ஐந்து நிமிடம் நடந்து உச்சிக்குச் சென்றால் பழங்காலப் பள்ளிவாசலைப் பார்க்கலாம். அந்த மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலுக்குப் பக்கத்திலேயே தொடக்கப்பள்ளி ஒன்றும் உள்ளது.

## மார்க்கக் கல்வி

இங்குள்ள முஸ்லிம் குடும்பங்கள் இஸ்லாமிய நெறிமுறைகளை அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. பள்ளிவாசல் மலை உச்சியில் அமைந்திருப்பதால் அங்கு தொழுகைக்குச் செல்பவர்களும் மிகக் குறைவு. வெள்ளிக்கிழமை ஜு்ம்ஆ தொழுகை மட்டுமே நடைபெறுகிறது. அருகிலுள்ள பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரே இமாமாக முன்னின்று அந்தத் தொழுகையை நடத்துகிறார். தொடக்கப் பள்ளி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக

## சூலியா பள்ளிவாசலின் சேவை

மஸ்ஜித் ஜாமியா சூலியா பயணக் குழுவில் இடம் பெற்றிருந்த இமாம் யூசுப் காசிமி, இஸ்லாத்தின் அடிப்படை, அல்லாஹ் மீதான ஏக விசுவாசம் ஆகியவை குறித்து சுருக்கமாக உரையாற்றினார். இவ்வுலகில் தான் படைத்த அனைவருக்கும் அல்லாஹ்வே பாரபட்சமின்றி உணவளிக்கிறான் என்பதை அவர் எடுத்துரைத்தார். அவருடைய தமிழ் உரையை பயணக் குழுவைச் சேர்ந்த தப்லீக் ஜமாஅத் தொண்டூழியர் இந்தோனேசிய மொழியில்-மொழிபெயர்த்துக் கூறினார். திருக்குர்ஆன் வசனங்கள், கலிமா ஆகியவற்றை ஓதும் முறையும், சலாம் கூறும் முறை போன்றவையும் சிறார்களுக்குக் கற்றுத்தரப்பட்டன. பக்கத்துத் தொடக்கப் பள்ளியின் ஆசிரியர் லுஹர்-மதியத் தொழுகையை முன்னின்று நடத்தினார்.

தொழுகைக்குப் பிறகு மஸ்ஜித் ஜாமியா தொண்டூழியர்கள், பெர்த்தாம் தீவு முஸ்லிம் குடும்பங்களுக்கும், மஸ்லிம் அல்லாதவர்களுக்கும், பக்கத்துத் தீவுவாசிகளுக்கும் அரிசி, சீனி, எண்ணெய், துணிமணிகளை வழங்கினர்.

"விசுவாசிகளே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள்.. அல்லாஹ்வுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் சித்தியடைவீர்கள்."

- திருக்குர்ஆன், அத்தியாயம் 3 , வசனம் 200




சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்கள் பாரம்பரியத் தொழில்களில் மென்மேலும் செழித்து வளரும் வாய்ப்புக்குப் பஞ்சமில்லை. அதே சமயம் அவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப நல்ல தொழில் முனைவர்களாகவும் திகழ வேண்டும். பழமைக்கும் புதுமைக்கும் பாலமான புதிய தொழில் முனைப்பாற்றலை அவர்கள் உருவாக்க வேண்டும்.

மூத்த வெளியுறவுத் துணை அமைச்சரும் வடகிழக்கு சமூக மேம்பாட்டு மன்ற மேயருமான ஜைனுல் ஆபிதீன் ரஷீத் முன்வைத்த பரிந்துரை இது. சிங்கப்பூர் வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு குறித்த ஆய்வரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அரிய வரலாற்றுத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.



*ஹாஜி எஸ். எம். அப்துல் ஜலீல் சிறப்பு விருந்தினர் மேயர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் அவர்களுக்கு நினைவுப் பொருள் வழங்குகிறார்*



*மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத்*

பல நூற்றாண்டுக்கு முன்பே மரக்கலங்களில் சிங்கப்பூருக்கு வந்த சோழ மண்டல. “சூலியா” முஸ்லிம்களின் வரலாற்றைச் சுவையாக எடுத்துரைத்தார்.

தமிழ் முஸ்லிம்கள் சிங்கப்பூருக்கு ஆற்றியுள்ள பங்களிப்பு பாராட்டுக்குரியது. வருங்காலத்திலும் அந்தப் பங்களிப்பு நிலைபெற வேண்டும். அதற்கு வசதியாக மேம்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ஆலோசனை தெரிவித்தார்.

தமிழ் முஸ்லிம் குடும்பப் பிள்ளைகளின் கல்வித் தரத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பள்ளிகளிலும் உயர்கல்வி நிலையங்களிலும் அவர்களின் கல்வித் தரத்தையும் சாதனைகளையும் ஆராய்ந்து வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும். சிங்கப்பூரின் எதிர்காலத் தேவைகளுக்கு அப்போது தான் அவர்களால் ஈடு கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரில் பல நூற்றாண்டுகளாக தமிழ் முஸ்லிம்கள் வாழ்ந்து வரலாறு படைத்துள்ளதை சிங்கப்பூரர்கள் பரவலாக அறிந்திருக்கவில்லை. பல துறைகளில் அவர்கள் பயனுள்ள பங்காற்றி வந்துள்ளனர். இளைய தலைமுறையினருக்கு அதனை எடுத்துரைக்கும் ஒரு முயற்சியாக ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல், PBM தலைமையில் தமிழ் முஸ்லிம் நற்பணிக் குழு ஆய்வரங்கம் ஒன்றை நடத்தியது.

## பல துறை பங்களிப்பு

பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கில்



*திரு சாமுவேல் துரைசிங்கம் அவர்களுடன் மற்ற பேச்சாளர்கள்*

ஜுன் 11 மாலை நடைபெற்ற ஆய்வரங்கில் தமிழ் முஸ்லிம்களின் பல துறை பங்களிப்பு குறித்த ஆய்வுரைகள் படைக்கப்பட்டன.

வரலாற்று ஆய்வாளரும் ஓய்வுபெற்ற கல்வித் துறை துணை இயக்குநருமான திரு. எஸ். சாமுவேல் துரைசிங்கம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் சுப. திண்ணப்பன், தேசிய பல்கலைக் கழக ஆய்வு மாணவரான ஜெர்மனியின் திரு. டோர்ஸ்டன் சாச்செர், எழுத்தாளர் ஜே.எம். சாலி ஆகியோர் ஆய்வுரைகளை வழங்கினர்.

தென்னிந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் அந்நாளில் சிங்கப்பூரில் குடியேறிய வரலாற்றுப் பின்னணி, முன்னோடிகளான அவர்கள் ஆற்றிய வணிக, தொழில்துறை பணிகள், தமிழ்க் கல்வி, இலக்கிய, கலாசார, தகவல் சாதன வளர்ச்சிப் பணிகள், அரசியல் பங்கேற்பு, சமய நற்பணிகள் ஆகியவை ஆராயப்பட்டன. தமிழ் நாட்டின் கரையோர மாவட்டங்களிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிங்கப்பூருக்கு வந்த முஸ்லிம்கள் ஆற்றிய அரும்பணிகளை ஆதாரபூர்வமாக திரு டோர்ஸ்டன் எடுத்துரைத்தார்.

## வரலாற்றுப் பதிவு

துணி இறக்குமதி உள்ளிட்ட வர்த்தகத் துறையிலும், ஒட்டுக்கடை, கத்திக்கடை போன்ற சிறு வணிகங்களிலும் அவர்கள் முனைப்பாக ஈடுபட்டனர். துறைமுக ஊழியர்களாக தமிழ் முஸ்லிம்கள் பணிபுரிந்தது அரிய வரலாற்றுப் பதிவு. காரைக்கால் வீதியும் கடையநல்லூர் வீதியும் சில எடுத்துக்காட்டுகள் என தமது ஆய்வில் குறிப்பிட்டார் வரலாற்று ஆய்வாளர் திரு சாமுவேல் துரைசிங்கம்.

தமிழ் முஸ்லிம்கள் சிங்கப்பூரின் மொழி, கல்வி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றி வந்துள்ள பங்கு பணிகளை பேராசிரியர் டாக்டர் திண்ணப்பன் விரிவாகத் தமது உரையில் பட்டியலிட்டார். தென் கிழக்காசியாவின் ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியாக உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையம் விளங்கி வரலாறு படைத்ததையும், மகுதூம் சாயபு அந்நாளில் சிங்கை நேசன் இதழ் நடத்தி முன்னோடியாகத் திகழ்ந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூர் தமிழ் இதழியல், பதிப்பகத் துறைக்கு தமிழ் முஸ்லிம்களே முன்னோடி என்பதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய எழுத்தாளர் ஜே.எம்.சாலி, தமிழ் முஸ்லிமகளின் பங்களிப்பைப் பதிவு செய்ய இணையத் தளம் ஒன்றை அமைப்பது காலத்தின் கட்டாயம் எனத் தெரிவித்தார்.

ஆய்வுரைகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலாக வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த முயற்சியின் ஒரு முன்னோட்டமே இந்த ஆய்வரங்கு என்றும் அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நற்பணிக் குழுவின் செயலாளர் இலியாஸ் வரவேற்புரையில் கூறினார்.

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் கடந்த காலப் பணிகள் தொடர்பான அரிய தகவல்கள், படங்கள், குறிப்புகள், பழைய செய்தித்தாள், இதழ்கள், பிரசுரங்கள் ஆகியவற்றை வழங்கி உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



*ஆய்வரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு சிலர்*

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்




Book launch ceremony, 30 years of Haj Services in Singapore





The MUIS Distinguished visitors programme - Dr Muhammad Sayyid





Haj Seminar 2006 held at The Grassroots' Club




Majlis Maulidur Rasul 1427H at Al Istighfar Mosque

# மதரஸா நூருல் இஸ்லாமின் முகாம்

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், அதன் மதரஸா நூருல் இஸ்லாமின் சார்பில் கடந்த 16.6.2006 முதல் 18ஆம் தேதி வரை கிளமெண்டி மஸ்ஜித் தெந்த்ரா-டி- ராஜா பள்ளிவாசலில் மாணவ முகாமை நடத்தியது.

சுமார் 40 மாணவ மாணவியர் பங்கேற்றனர். மாணவர்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கப் பயிற்சியும், பெற்றோரிடமும், அண்டை அயலாரிடமும் பிள்ளைகள் நடந்து கொள்ளும் நன்னெறிப் பயிற்றுவிப்பும் வழங்கப்பட்டன.

அதிகாலை தஹஜ்ஜுத் தொழுகை முதல் இரவில் உறங்கச் செல்லும் வரை இறைச் சிந்தனையுடன் வாழும் ஆன்மீகப் பயிற்சியும் இம் முகாமில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. உடலுக்கு உற்சாகமளிக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் பங்கேற்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் (முயிஸ்) அறிமுகம் செய்துள்ள டீன்ஸ் அ லைவ் (Teens aL.I.V.E.) கல்வி போதனை முறை முகாம் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக அமைந்தது. இளையருக்கான அந்தக் கல்வி போதனை முறையை சங்கத்தின் செயலாளர் கே.பி. முஹம்மது ஜாபர் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். பொழுதுபோக்காகவும் அதே சமயம் பயன் மிக்கதாகவும் கல்வி போதனை முறைகள் அமைந்ததால், இத்தகைய முகாம்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என மாணவர்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தனர்.



# புக்கிட் பாஞ்சாங்கில் மதரஸா

பல மதரஸாக்களை நடத்திவரும் சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் புக்கிட் பாஞ்சாங், சுவா சூ காங் வட்டார முஸ்லிம்களின் மார்க்கக் கல்வி வசதிக்காக புதிய மதரஸாவைத் தொடங்கியிருக்கிறது. அல் மதரஸா நூருல் இஸ்லாம் எனும் பெயரில் அதன் மதரஸாக்கள் இயங்கி வருகின்றன.

புக்கிட் பாஞ்சாங் அல்- ஈமான் பள்ளிவாசலில் தொடங்கப்பட்டுள்ள மதரஸாவை நன்கு பயன்படுத்திக் கொள்ளும்படி அந்த வட்டார முஸ்லிம் குடும்பங்களை தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கம்போங் டெல்டா, அங் மோ கியோ, ரெட் ஹில் அர் ராபிதா, அல் அப்ரார், பிடோக், ஜுரோங் ஆகிய இடங்களில் இச்சங்கம் ஏற்கனவே மதரஸாக்களை நடத்தி வருகிறது. குர்ஆன் ஓதுதல் (தஜ்வீதுடன்), பிக்ஹ், அஹ்லாக், சீரா, தர்பியா போன்ற பாடங்களுடன் தொழுகை. நன்னடத்தை போன்ற இபாதத்துகள் செயல்முறை பயிற்சியாகவும் இம் மதரஸாக்களில் நடத்தப்படுகின்றன.

சிறந்த ஆலிம்களின் பயிற்றுவிப்பில், தொண்டூழியர்களின் உறுதுணையுடன் வகுப்பு நடத்தப்படுவதால் இவற்றில் பயின்று பயனடையும்படி சங்க நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேல் விவரங்களுக்கு: செயலாளர் ஹாஜி கே.பி. முஹம்மது ஜாஃபர் - 96222579, உஸ்தாத் ந.அ. மில்லத் இஸ்மாயில் ரியாஜி - 97989950



# அறநெறி, சமூக ஒழுங்குமுறை கோட்பாடே

# ஜிஹாத்

## ஆய்வரங்கில் அரிய விளக்கங்கள்

### ஜிஹாத் என்றால் என்ன?

சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவதுதான் முக்கிய ஜிஹாத். ஒழுக்க முறைகளை நன்னெறிகளை குடும்பத் தலைவர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து ஒழுங்குமுறையை வளர்ப்பது முக்கிய கடமை.

இஸ்லாத்தின் பெயரில் சிலர் தீவிரவாதத்தில் ஈடுபடுகின்றனர். அது தவறு. இஸ்லாத்தில் தீவிரவாதம் இல்லை. அதற்கு இடமே இல்லை. தீவிரவாதத்திற்கு இடமிருப்பதாக நினைத்தால் அது தவறு .

இத்தகைய பலமுனைச் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளும் பயன் மிக்க நிகழ்ச்சியாக அமைந்தது இந்திய முஸ்லிம் பேரவை நடத்திய ஜிஹாத் விளக்க ஆய்வரங்கம். பேரவையில் அங்கம் வகிக்கும் 16 இந்திய முஸ்லிம் சங்கங்களும், இந்திய முஸ்லிம் பள்ளிவாசல் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து சுல்தான் பள்ளிவாசல் இணைப்பு அரங்கில் 25.6.2006 அன்று நடத்திய சிறப்பு நிகழ்ச்சி இது. பிற்பகல் 2.25 மணிக்குத் தொடங்கிய ஜிஹாத் அரங்கில் மூத்தோர், இளைஞர், மாதர்கள் உட்பட சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

### கட்டொழுங்கு

இந்திய முஸ்லிம் பேரவையின் துணைத் தலைவர் ஹாஜி நஸீர் கனி அனைவரையும் வரவேற்று தொடக்கவுரையாற்றினார். முயிஸ் மற்றும் சமய ஆலோசனை அமைப்புகளின் சொற்பொழிவாளர்களுக்கு நல்வரவு கூறிய அவர், ஜிஹாத் விளக்க அரங்கின் நோக்கத்தையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி ஃபெரோஸ் கான், இஸ்லாம் கூறும் ஜிஹாத்தின் பொருளை தமது தமிழ் உரையில்



*கேள்வி பதில் நேரம்*

விளக்கிக் கூறினார். அன்பு, நீதி, பரிவு, சகிப்புத் தன்மை, கட்டொழுங்கு முதலான நற்பண்புகளை இஸ்லாம் போதிக்கிறது. எனவே, முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லற போதனைகளையும் வழிமுறைகளையும் முன்னுதாரணமாகப் பின்பற்ற வேண்டும். அவர்கள் காட்டிய அன்பு. மன்னிக்கும் மனப்பாங்கு, நீதி நெறிமுறைகளை அனைத்து முஸ்லிம்களும் கடைப்பிடிக்க வேண்டும். விலங்குகளிடமும் உயிரினங்களிடமும் அன்பு காட்ட வலியுறுத்தும் அண்ணலாரின் நன்மொழிகள் உள்ளிட்ட பல ஹதீசுகளை ஹாஜி ஃபெரோஸ் கான் மேற்கோள் காட்டினார்.

உலகின் சில பகுதிகளில் பிரச்சினைகள் நிலவிய போதிலும் யாருக்கும் எவ்வித பாதிப்பும் சேதங்களும் நேராத வகையில் ஆக்ககரமான போக்கை முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும். மக்கள் அனைவரையும் சமத்துவமாக நடத்தும் சிங்கப்பூர் அரசாங்கத்தின் கொள்கை சிறந்த எடுத்துக்காட்டு. அதனால் அமைதிக்கும், சமய, சமூக நல்லிணக்கத்திற்கும் வளப்பத்திற்கும்

   

*ஆய்வரங்கில் உரையாற்றிய உஸ்தாஸ் முஹம்மது பின் ஹாஜி அலி, ஹாஜி ஃபெரோஸ் கான், உஸ்தாஸ் காதி ஹாஜி இப்ராஹிம், உஸ்தாஸ் நசீருதீன் முஹம்மது நசீர்*

வழிகாட்டும் நிலையில் நாம் இருக்கிறோம். சில குழுக்கள் தவறான வழியில் செயல்படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது என்றும் ஹாஜி ஃபெரோஸ் கான் குறிப்பிட்டார்.

## தவறான இயக்கம்

அடுத்து உஸ்தாஸ் முஹம்மது பின் ஹாஜி அலி, ஜமாஅ இஸ்லாமியா இயக்கம், பயங்கரவாத தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் ஆகியவை குறித்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஜமாஅ இஸ்லாமியா இயக்கத்தின் தோற்றம், கொள்கை, அதன் தலைவர்களின் இலக்கு, போக்கு, உறுப்பினர்களைத் திரட்டும் முறை முதலானவற்றை அவர் சுட்டிக்காட்டினார். உள்துறை அமைச்சினால் உருவாக்கப்பட்ட சமய சீர்திருத்தக் குழு (RRG), இங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜமாஅ இஸ்லாமியா கைதிகளுக்கு சீர்திருத்த ஆலோசனை சேவைகளை வழங்கிவருகிறது. அதன் பணிகளை உஸ்தாஸ் முஹம்மது பின் ஹாஜி அலி விளக்கினார். அவர்களின் சீர்திருத்தத்திற்கு முஸ்லிம் சமூகம் உரை நிகழ்ச்சிகள், விவாதங்கள், ஆய்வரங்குகள் ஆகியவற்றை நடத்தலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

## சமுதாய ஒழுங்கு

ஜிஹாத் கோட்பாட்டுக்கு தமிழில் விரிவாக விளக்கம் தந்தார் உஸ்தாஸ் காதி ஹாஜி இப்ராஹிம். பல மார்க்கங்களையும் சமூகங்களையும் கொண்டது உலகம். இஸ்லாம் மட்டுமே இருக்க வேண்டும் என்று ஏக இறைவனான அல்லாஹ் நாடியிருந்தால் அப்படி செய்திருக்கலாம். ஆனால் அப்படி நாடவில்லை. உங்கள் மார்க்கம் உங்களுக்கு, எங்களுக்குரியது எங்களுக்கு என்று தான் குர்ஆனில் அவன் அருளியிருக்கிறான். அதாவது எங்கள் செயலுக்குரிய கூலி எங்களுக்கும் உங்கள் செயலுக்குரிய கூலி உங்களுக்கும் கிடைக்கும் என்றே அல்லாஹ் கூறுகிறான்.

பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பது நபி பெருமான்(ஸல்) அவர்களின் நல்லுரை. அவர்கள் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. எந்த சமயத்தினராக இருந்தாலும் அவர்களுக்கு அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டும் என்பதே அவர்களின் போதனை. சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவதுதான் முக்கிய ஜிஹாத். ஒழுக்க முறைகளை (Moral values) நன்னெறிகளை குடும்பத் தலைவர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து ஒழுங்குமுறையை வளர்ப்பது முக்கிய கடமை.

இஸ்லாத்தின் பெயரில் சிலர் தீவிரவாதத்தில் ஈடுபடுகின்றனர். அது தவறு. இஸ்லாத்தில் தீவிரவாதம் இல்லை. அதற்கு இடமே இல்லை. தீவிரவாதத்திற்கு இடமிருப்பதாக நினைத்தால் அது தவறு.

உஸ்தாஸ் காதி ஹாஜி இப்ராஹிம் ஜமாஅ இஸ்லாமியா இயக்கத்தின் தவறான

போக்கையும் நோக்கையும் எடுத்துரைத்தார். வெற்றிகரமான முன்னணி சமூகத்தினராக முஸ்லிம்கள் திகழ்வதற்கு வழிகாட்டும் அறநெறிக் கோட்பாடே ஜிஹாத். குற்றச் செயல்கள், கொடுமைகள், தீய உணர்வுகளிலிருந்து மக்களை நேர்வழிப்படுத்தும் தார்மீக சக்தியே ஜிஹாத். தீவிரவாதம். பயங்கரவாதம் போன்ற தீமைகளுக்கும் அதற்கும் தொடர்பில்லை என தெளிவாக எடுத்துரைத்தார் அவர்.

## உன்னத இலக்குகள்

அடுத்து உரையாற்றிய உஸ்தாஸ் நசீருதீன் முஹம்மது நசீர், சிங்கப்பூர் முஸ்லிம்களின் மேம்பாட்டுக்கு முயிஸ் மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளையும் திட்டங்களையும் எடுத்துரைத்தார். சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமய, சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்தி, அவர்களின் அடையாளத்தை நிலைபெறச் செய்யும் ரிஸாலா திட்டத்தையும் அவர் விளக்கினார். ரிஸாலா திட்ட நூல் ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்படும். உஸ்தாஸ், இமாம் அங்கீகாரத் திட்டம், வெள்ளிக்கிழமை தொழுகை குத்பா உரை தமிழ் மொழி பெயர்ப்பு முதலான திட்டங்களையும் அவர் குறிப்பிட்டார். வெளிநாடுகளில் தமக்குக் கிடைத்த கல்வி அனுபவங்களை பகிர்ந்து கொண்ட உஸ்தாஸ் நசீருதீன், மற்றவர்களுக்கு வழிகாட்டும் வகையில் முஸ்லிம்கள் அறிவியல். மருத்துவம், தொழில்துறை முதலானவற்றில் தேர்ச்சியையும் திறனையும் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ஆக்ககரமான வாழ்க்கை முறையே முஸ்லிம்களின் இலக்காக இருக்க வேண்டும். வன்செயலுக்கு இடமே இருக்கக்கூடாது. சிங்கப்பூரில் மேலும் உயர்ந்த, உன்னத முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் முயிஸ் பல்வேறு அமைப்புகளுடனும் பள்ளிவாசல்களுடனும் பாடுபட்டு வருகிறது என்றார் அவர். பள்ளிவாசல்கள் தொழுகைத் தலமாக மட்டுமின்றி அறிவாற்றல் மற்றும் வழிகாட்டும் மையங்களாகத் திகழ வேண்டும். அவற்றின் நற்பணிகள் மூலம் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் முஸ்லிம் அல்லாத சமூகங்களையும் ஈர்க்க வேண்டும் என்று உஸ்தாஸ் நசீருதீன் கேட்டுக் கொண்டார்.

தமிழ், ஆங்கில உரைகளைத் தொடர்ந்து கேள்வி-பதில் அங்கம் இடம் பெற்றது. எழுத்து மூலமாகவும், நேர்முகமாகவும் வினாக்கள் தொடுக்கப்பட்டன.

சில கேள்விகள்:

சிறந்த முஸ்லிமாகவும் சிறந்த சிங்கப்பூரர்களாகவும் நாம் திகழ்வது எப்படி?

சிங்கப்பூர் முஸ்லிம்கள் பிற நாட்டு முஸ்லிம்களுக்கு தீவிரவாதி எனும் முத்திரையின்றி உதவுவது எப்படி?

சிங்கப்பூரில் ஜமாஅ இஸ்லாமியா கொள்கையை நாம் முறியடிப்பது எப்படி?

ஜமாஅ இஸ்லாமியா உறுப்பினர்கள் இஸ்லாமியக் கல்வியை எப்படி, எங்கிருந்து பெறுகிறார்கள்?

தமிழ் வினாக்களுக்கு ஹாஜி ஃபெரோஸ் கானும் ஹாஜி இப்ராஹிமும் விடையளித்தனர். ஆங்கிலக் கேள்விகளுக்கு உஸ்தாஸ் நசீருதீனும் உஸ்தாஸ் முஹம்மதுவும் பதிலளித்தனர்.



*ஜிஹாத் ஆய்வரங்கில் கலந்து கொண்ட ஒரு பகுதியினர்*

# ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் கல்வி உதவித் திட்டம்





ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் (UIMA) வசதி குறைந்த மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவிக்கரம் நீட்டி வருகிறது.

இவ்வாண்டுக்கான அதன் கல்வி உதவித் தொகைகள் என்.டி.யு.சி சென்டரில் மே 28-ஆம் தேதி நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன. கல்வி அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். முயிஸ், மெண்டாக்கி அதிகாரிகள், மலாய், இந்திய சமூக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அடித்தள அமைப்புகள், முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத அமைப்புகளின் தலைவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இன, சமய. சமூக பேதமின்றி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதே ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் நோக்கம். கல்விக்கு நம் சமூகம் வழங்கிவரும் முக்கியத்துவத்தையும், முன்னுரிமையையும் பகிர்ந்து கொள்ளும் சிறப்பான ஒரு நிகழ்ச்சியாக அது அமைந்தது.

குறைந்த வருவாயுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் ஆண்டு தோறும் உபகாரச் சம்பளம் வழங்கி வருகிறது. அதன் உதவித் திட்டத்தினால் இதுவரை சுமார் 1000 பல இன, சமூக மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இவ்வாண்டு 105 இந்திய மாணவர்களும் இந்தியர் அல்லாத பல இன மாணவர்கள் சுமார் 200 பேரும் உதவித் தொகை பெற்றனர். கல்வி உதவித் தொகையை வழங்கி உரையாற்றிய அமைச்சர் தர்மன் சண்முகரத்னம், இன, சமயப் பாகுபாடின்றி அனைத்து சமூக மாணவர்களுக்கும் கல்வி உதவி நிதி வழங்கும் சங்கத்தின் நற்பணி பாராட்டுக்குரியது எனக் குறிப்பிட்டார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்திற்கு தமது அமைச்சு பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். சங்கத்தின் ஆலோசகரும் முன்னைய தலைவருமான எம்.கே.ஏ. ஜப்பார் தொடங்கி வைத்த கல்வி உதவிப் பணியை அமைச்சர் பாராட்டினார்.

இந்திய முஸ்லிம் சமூக மாணவர்கள் போட்டித் திறனுடன் முன்னேறி வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். சங்கத்தின் கல்வி உதவியினால் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பல மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர். ராபிள்ஸ் கல்விக் கழகம், மெரிடியன் இளையர் கல்லூரி, விக்டோரியா இளையர் கல்லூரி மாணவர்கள் அவர்களில் அடங்குவர். மலாய், தமிழ், சீனம் மற்றும் ஆங்கில மொழியில் நான்கு மாணவர்கள் உரையாற்றினர். குறு நாடகம், பரிசளிப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வரும் ஆண்டுகளில் மேலும் அதிகமான மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க சங்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாக சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.





# அல் ஹைர் மதரஸாவில் புதிய தலைமுறையினருக்கு புதிய பாடத்திட்டம்

முப்பது ஆண்டுகளுக்கு முன், தற்காலத்தில் பெற்றோர் அந்தஸ்தில் இருக்கும் நாம் மதரஸாவிற்கு சென்ற நம் கால கட்டத்தையும், இன்று நமது பிள்ளைகள் செல்லும் கால கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சூழ்நிலைகள் எவ்வளவு மாறி உள்ளன என்பது நம்மை வியக்க வைக்கும்.

அந்தக் கால கட்டத்தில் சிங்கப்பூர் தொலைக்காட்சியில் நாள் ஒன்றுக்குச் சில மணி நேரமே நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். திரைப்படம் பார்க்க வேண்டும் என்றாலும் பெற்றோருடனோ அல்லது அவர்களின் அனுமதியுடனோதான் செல்ல முடியும். இணையம், கைத் தொலைபேசி, ஒளி வட்டுக்கள் போன்ற பொழுதுபோக்கு சாதனங்களெல்லாம் நம் கற்பனையில் கூட இல்லை. இதனால் நமக்கெல்லாம் நிரம்ப நேரம் இருந்தது. பக்கத்தில் இருக்கும் பள்ளிவாசலின் மதரஸாவில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் உட்கார்ந்து மார்க்கக் கல்வியைப் பாரம்பரிய முறையில் பயில்வதென்பது நமக்கு ஒரு பாரமாக தெரியவில்லை. அப்படியே நமக்கு சற்றுச் சலிப்பாக இருந்தாலும் கூட, நமது பெற்றோரிடத்திலே "மதரஸாவிற்குப் போக மாட்டேன்!" என்று கூறும் அளவிற்கு நம்மிடத்தில் அந்த நேரத்தில் அவ்வளவு தைரியமும் ஸ்டாக்கில் இல்லை!

ஆனால், தற்போதைய பிள்ளைகளின் சுற்றுச் சூழல்களும், நிலைமையும் வேறு விதமாக உள்ளன. இருபத்து நான்கு மணி நேர தொலைக்காட்சி, இணையம் , எக்ஸ் பொக்ஸ் போன்ற பொழுதுப் போக்குச் சாதனங்கள் பிள்ளைகளின் நேரத்தையும் கவனத்தையும் ஈர்த்து மதரஸாவை ஒரு "போர்" அடிக்கும் இடமாக அவர்களின் சிந்தையில் இடம் பெறச் செய்துள்ளன. அப்படியே இவர்களைக் கட்டாயப்படுத்தி மதரஸாவிற்கு அனுப்பலாம் என்றாலும், உடனே மனித உரிமைச் சட்டங்களையெல்லாம் பேசி நம்மை மடக்க முற்படுகிறார்கள், நம் கண்மணிகள்!



*கடற்கரையும், மரத்தடியும் மதரஸாவாக மாறுகிறது Kids aL.I.V.E. 2ம் படிவ மாணவர்களுக்கு*

இந்த நிலையைப் போக்கி, பிள்ளைகளை மதரஸாக்களின் பக்கம் ஈர்க்க, முயிஸ் புதிய சிங்கப்பூர் இஸ்லாமியப் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் கீழ், நமது இந்திய முஸ்லிம் மாணவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டச் சுவா சு காங்கில் இயங்கும் அல் ஹைர் ஆங்கில மதரஸா (EMAK), கிட்ஸ் அலைவ் (Kids aL.I.V.E) பாடத்திட்டத்தை இந்த வருட (2006) ஆரம்பத்திலிருந்து அமுல் செய்துள்ளது. இதில் 5 லிருந்து 8 வயது வரை உள்ள 37 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

அது மட்டுமல்லாமல், டீன்ஸ் அலைவ்



*அல் ஹைர் மௌலூத் நபி நிகழ்ச்சியில் kids aL.I.V.E. 1ம், 2ம் படிவ மாணவர்கள்*

(Teens aL.I.V.E.) எனப்படும் 13 முதல் 16 வயது இளைஞர்களுக்கான பாடத்திட்டத்தையும் நடத்த EMAK அங்கீகாரம் பெற்று முதன்முறையாக நமது இந்திய மாணவர்களுக்காக கடந்த ஜூன் மாதத்தில், இரு நாள் முகாமையும் நடத்தியது. இன்ஷா அல்லாஹ், தொடர்ச்சியாக டீன்ஸ் அலைவ் முகாம்களை இந்த வருடம் நடத்துவதோடு, அடுத்த வருடத்திலிருந்து வாரந்தோறும் சுமார் 60 இளைஞர்களுக்காக டீன்ஸ் அலைவ் வருடாந்திரப் பாடத்திட்டத்தையும் நடத்தவிருக்கின்றது EMAK.

இப்பாடத் திட்டங்களின் கீழ், பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே , அவர்களின் வயதுக்குப் பொருத்தமான முறையில் இஸ்லாமியக் கல்வி போதிக்கப்படுகின்றது. தொழில் பட்டறைகள், கல்விச் சுற்றுலாக்கள், நவீன மீடியா படைப்பு முறைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அவர்களை ஈர்த்து தக்க வைக்க முற்படுகின்றது EMAK.

மேலும், 2008ல் மூயிஸ் 9 வயது முதல் 12 வயது வரைக்கு இடைப்பட்டப் பிள்ளைகளுக்கான டுவீன்ஸ் அலைவ் (Tweens aL.I.V.E) பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியவுடன், இன்ஷா அல்லாஹ் அதையும் எடுத்து நடத்தி கிட்ஸ் அலைவ், டீன்ஸ் அலைவ் பாடத்திட்டத்துடன் இணைத்து 5 வயது முதல் 16 வயது வரை பன்னிரண்டு வருடங்களுக்குத் தொடர்ச்சியாக குழந்தைகள் தரமான இஸ்லாமியக் கல்வியைப் பெற உதவ நாடுகிறது EMAK.

இம்மதரஸாவில் சேர விரும்பும் மாணவர்கள் பதிவாளர்களுக்கு 9652 4367, 9021 6181 தொலைபேசி எண்களின் மூலமாகவோ அல்லது emak@alhair.mosque.org.sg எனும் மின் அஞ்சல் வழியாகவோ தொடர்பு கொண்டு பதிந்து கொள்ளலாம். குறிப்பாக சிங்கப்பூரின் மேற்கு, தென் மேற்கு பகுதிகளில் வசிக்கும் இந்திய முஸ்லிம் மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



*Teens aL.I.V.E. பட்டறையில் தங்களின் கருத்துகளை விளக்கும் மாணவிகள்*

# கடையநல்லூர் முஸ்லிம் லீகின் குடும்ப தினம்
# மகிழ்வான குடும்பங்களே, வலுவான குடும்பங்கள்



சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் களைகட்டும் வருடாந்திர நிகழ்ச்சிகளில் ஒன்று குடும்ப விழா. இந்நிகழ்ச்சிக்கு ஒவ்வோராண்டும் பெருந்திரளான மக்கள் தங்கள் குடும்ப சகிதமாய் ஒன்று கூடுவர். சிறியோர் முதல் பெரியோர் வரை ஆண்கள் முதல் பெண்கள் ஈறாக உள்ள உறுப்பினர்கள் பரஸ்பர அன்பைப் பரிமாறிக்கொள்ளவும், குடும்ப உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளவும் இக்குடும்ப தினத்தை பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

இவ்வாண்டு நிகழ்ச்சி குடும்ப உறவுகளை மேலும் ஐக்கியப்படுத்தும் வகையில் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிங்கப்பூரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காலையில் கிளம்பி நிகழ்ச்சிக் களமாக விளங்கிய ஈஸ்ட் கோஸ்ட் கடற்கரைப் பூங்காவில் ஒன்று கூடத் தலைப்பட்டனர். சுமார் 9.00 மணிக்கெல்லாம் 800க்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

குதூகலப் போட்டிகள், கேளிக்கை விளையாட்டுகள் கலைநிகழ்ச்சிகள் எனப் பல்வேறு அங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ஏற்பாட்டுக் குழுவினராகிய இளையர் பிரிவினரும், பொறுப்பாளர்களும் புடைசூழ, மெரின் பெரேடு குழுத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர், லீகின் உறுப்பினர்களின் பலத்த கரவொலிக்கு இடையே மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

நாட்டின் முக்கிய அங்கமாக விளங்கும் குடும்பங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கவும், அவற்றின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அரசாங்கம் எப்பொழுதும் கடப்பாடு கொண்டிருக்கிறது என்றும் இத்திட்டத்திற்கு வலுவுண்டாக்கும் அமைப்புகளை அரசாங்கம் பாராட்டத் தவறவில்லை என்றும் சிறப்பு விருந்தினர் டாக்டர் முஹம்மது ஃபைஸல் இபுராஹிம் தெளிவுபடுத்தினார்.

இந்த வகையில் உறுப்பினர்களின் குடும்ப வாழ்வை மேலும் இனிமையுடையதாக வைத்திருக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கை தாம் மனமுவந்து பாராட்டுவதாகவும் டாக்டர் ஃபைஸல் குறிப்பிட்டார்.

11-6-2006ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற குடும்ப விழா, சமூகத்தின் நாடிகளாக விளங்கும் மூத்த குடிமக்களை மறக்கவில்லை. இருபெரு நிகழ்ச்சிகள் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பெர்தாஃபிஸ் முதியோர் இல்ல உறுப்பினர்களின் சமூகப் பங்களிப்பிற்காக அவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் ஆக முதிய உறுப்பினராகக் கருதப்படும் லீகின் முன்னாள் தலைவர் சிறப்பிக்கப்பட்டதோடு, தந்தையர் தினத்தை நினைவுகூரும் பேராளராகவும் இருந்து அவர் தந்தையர் தினத்தை நினைவு கூர்ந்தார்.

பல பழைய நண்பர்களையும், சமூகத்தின் மூத்த உறுப்பினர் சிலரையும் சந்தித்துப் பேசவும், அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் வகை செய்த குடும்ப விழாவை சங்க உறுப்பினர்கள் பலரும் நெடுநாள் நினைவில் வைத்திருப்பர்.

